செ.வெ.எண்: 232 நாள்:09.04.2018

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தமிழக அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் 37 பயனாளிகளுக்கு ரூ.41.31 லட்சம் மதிப்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (09.04.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் தீண்டாமை கடைபிடிக்காத மற்றும் நல்லிணக்கத்துடன் வாழும் ஆதிதிராவிடர் கிராமங்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தில் சிவகிரி வட்டம் வாசுதேவநல்லூர் ஒன்றியம் துரைச்சாமியாபுரம் ஊராட்சிக்கு ரூ.10 லட்சம் பரிசு தொகைக்கான காசோலையினையும், ஆண்டிற்கு ஒரு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிக்கு உட்கட்டமைப்பு மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் நல்லம்மாள்புரம் டாக்டர் அம்பேத்கர் அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.5 லட்சத்திற்கான காசோலையினையும், 2 பயனாளிகளுக்கு தலா ரூ.8846 மதிப்பிலான தையல் இயந்திரம் மொத்தம் ரூ.17,798 மதிப்பிலும், வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 5 நபர்களுக்கு ரூ.18 லட்சம் மதிப்பிலான தீருதவி தொகைக்கான காசோலைகளையும், பாளையங்கோட்டை வட்டம் சிவந்திப்பட்டி கிராமத்தை சேர்ந்த 25 பயனாளிகளுக்கு தலா ரூ.32,400 மதிப்பில் மொத்தம் ரூ.8.10 லட்சம் மதிப்பிலான இலவச வீட்டுமனை பட்டாக்களையும், பாளையங்கோட்டை வட்டத்தில் 2 பயனாளிகளுக்கும், மானூர் வட்டத்தில் 1 பயனாளிக்கும் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000 உதவித்தொகை வழங்குவதற்கான உத்தரவினையும் என மொத்தம் 37 பயனாளிகளுக்கு ரூ.41,30,798 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தனிப்பிரிவு மூலம் மனுக்கள்,மாவட்ட ஆட்சித்தலைவர் மக்கள்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறபட்ட மனுக்கள் ஆகியவற்றில் நிலுவை உள்ள மனுக்கள் குறித்து ஆய்வு மேற்க்கொண்டார். அனைத்து மனுக்களின் மீதும் உடன் நடவடிக்கை மேற்க்கொள்ள உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, கலால் உதவி ஆணையர் திரு.பழனிகுமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.விஜயகுமார், பாளையங்கோட்டை வட்டாச்சியர் திரு.கந்தசாமி, உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.